பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

08 08 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- நடப்பு நிதி ஆண்டுக்கான நிதி மசோதா மக்களவையில் சில திருத்தங்களுடன் நிறைவேறியது.
- அறிவியல் தொழில்நுட்பத்துறையில் வழங்கப்படும் மிக உயரிய விருதான தேசிய அறிவியல் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் எட்டு சிட்கோ தொழில்பேட்டைகள் அமைப்பதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக ஊரக தொழில்துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.
- குடிசைகள் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் நோக்குடன் மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அமைச்சர் திரு செஞ்சி மஸ்தான் கூறியுள்ளார்.
- பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா இன்று இரண்டு பதக்கங்களுக்கான போட்டிகளில் பங்கேற்கிறது. மல்யுத்தப் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக வினேஷ் போகத் அறிவித்துள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நடப்பு நிதி ஆண்டுக்கான நிதி மசோதா நேற்று மக்களவையில் சில திருத்தங்களுடன் நிறைவேறியது.

முன்னதாக மசோதா மீது நடைபெற்ற விவாத்திற்கு பதிலளித்து பேசிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வரிச்சட்டங்களை மத்திய அரசு எளிமைப்படுத்தி உள்ளதாகக் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு வரிச்செலுத்தும் முறையில் மிகப்பெரிய மாற்றங்களை செய்ததாக அவர் தெரிவீத்தார்.

வரி தொடர்பான விஷயங்களில் வெளிப்படைத் தன்மை கொண்டுவரப்பட்டதாகவும், நடைமுறைகளும் எளிதாக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்றும், வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

ரியல் எஸ்டேட் துறையில் புதிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் நிதி மசோதாவில் சில திருத்தங்களையும் அமைச்சர் தாக்கல் செய்தார்.

இந்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மருந்து பொருட்கள், காப்பீட்டு பிரிமியம் மீதான சரக்கு மற்றும் சேவை வரியை அரசு திரும்பப்பெற வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், மருத்துவ காப்பீடு மீதான 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரியை நீக்குவது குறிதது அதற்கான கவுன்சில்தான் முடிவு செய்ய வேண்டுமென்று தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பாக அரசுக்கு பல்வேறு யோசனைகள் வந்துள்ளதாகவும், அவை அனைத்தும் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நடுத்தர மக்கள் மீது வரிச்சுமை அதிகரிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறும் குற்றச்சாட்டுகளை அமைச்சர் மறுத்தார்.

தனி நபர் வருமான வரியில் நிரந்தர கழிவு ஐம்பதாயிரம் ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாயாக அரசு உயர்த்தி உள்ளதை திருமதி நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டினார்.

**[]<<<>>>[]**

முதுகலை மருத்துவ படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வில் வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாக வந்துள்ள செய்திகளை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக சில ஊடகங்களில் வெளியான தகவல் தவறானவை என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2024-ஆம் ஆண்டுக்கான மருத்துவ முதுநிலை படிப்புக்கான நுழைவுத் தேர்வுக்கான வினாத்தாள் இன்னும் தேசிய மருத்துவ அறிவியல் தேர்வு வாரியத்தால் தயாரிக்கப்படவில்லை என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

கேள்வித் தாள்கள் விற்பனை செய்வதாக மாணவர்களை ஏமாற்றிய நபர்கள் மீது ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

இந்தியாவில் அறிவியல் தொழில்நுட்பத்துறையில் வழங்கப்படும் மிக உயரிய விருதான தேசிய அறிவியல் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், புதுமை கண்டுபிடிப்பாளர்கள், தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு ஆண்டுதோறும் இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறைக்கு சிறப்பான பங்களிப்பை ஆற்றியதற்காக சந்த்ரயான்- மூன்று திட்டக்குழு இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அறிவியல் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ஜி பத்மநாபன் அறிவியல் ரத்னா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

உயிரி அறிவியல் துறையில் அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்புக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படவுள்ளது.

அறிவியல் ஸ்ரீ விருதுக்கு விஞ்ஞானிகள் அனந்த ராமகிருஷ்ணன், உமேஸ் வர்சனே, பீம்சிங், அடிமூர்த்தி **Adi**, சையத் வாஜா அகமது, சஞ்ஜய் பெஹாரி, ராகுல் முகர்ஜி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 23-ஆம் தேதி தேசிய விண்வெளித் தினத்தன்று தில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் இந்த விருதுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் எட்டு சிட்கோ தொழில்பேட்டைகள் அமைப்பதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக ஊரக தொழில்துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த திருமுடிவாக்கம் சிப்காட் பகுதியில் தொழில் கண்காட்சியை நேற்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

*( சவுண்ட்பைட் - தா மோ அன்பரசன் ) -37--- செகண்ட்*

**[]<<<>>>[]**

குடிசைகள் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் நோக்குடன் மாநில அரசு கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி வருவதாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் நேற்று நடைபெற்ற விழாவில், ஐந்து கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பில் வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

வயல்வெளிகள் மற்றும் வனப்பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களை கணக்கெடுத்து அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் விழுப்புரம் மாவட்டத்தில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு செஞ்சி மஸ்தான் கூறினார்.

**[]<<<>>>[]**

அமலாக்கத்துறை தமக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கை ரத்து செய்யக்கோரி மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு அனிதா ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

2001-ஆம் ஆண்டு முதல் 2006-ஆம் ஆண்டு வரை அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் வீட்டு வசதித்துறை அமைச்சராக அவர் இருந்தபோது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக 2006-ஆம் ஆண்டு தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு பதிவு செய்தது.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி திரு அனிதா ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தது.

இந்த தடையை நீக்கக்கோரி அமலாக்கத்துறை தாக்கல் செய்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க மறுத்துவிட்டனர்.

[]<<<>>>[]

தேசிய விண்வெளி தினத்தையொட்டி சென்னையில் நேற்று மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை சார்பில் மீன்வளத்துறையில் விண்வெளி தொழில்நுட்ப பயன்பாடு என்ற தலைப்பில் பயிலரங்கம் நடைபெற்றது.

இஸ்ரோ விஞ்ஞானி டாக்டர் கே என் பாபு இதில் பங்கேற்று தொலையுணர்வு தொழில்நுட்பம் மூலம் மீன்பிடி மண்டலங்களை கண்டறிவது குறித்து சிறப்புரையாற்றினார்.

செயற்கைக்கோள் மூலம் கிடைக்கும் தகவல்கள் மீன்வளத்துறைக்கு பெரிதும் பயனளிக்கும் என்றும், கடல்சார் தொடர்பான ஆய்வுக்கும் சிறந்த ஆதாரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

தமிழக அரசின் வேர்களை தேடி திட்டத்தின் கீழ் தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 15 நாடுகளில் வசிக்கும் அயலக தமிழர்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக 100 இளைஞர்களைக் கொண்ட இந்த குழுவினர் நேற்று தஞ்சை பெரியகோவில், சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர் கலைக்கூடம், கல்லணை ஆகியவற்றை பார்வையிட்டு, அவற்றின் வரலாற்று பெருமைகளை அறிந்து கொண்டதாக கனடாவிலிருந்து வந்த இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - இளைஞர் ) --- 40 செகண்ட்*

**[]<<<>>>[]**

நேபாளத்தில் நேரிட்ட ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த ஐந்து பேரின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன.

**[]<<<>>>[]**

துனிஷிய பிரதமர் திரு அகமது ஹசானி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் குண்டுகளை ஏவும் சாதனத்தை பாதுகாப்புப் படையினர் கண்டெடுத்து செயலிழக்கச் செய்தனர்.

**[]<<<>>>[]**

மணிப்பூரில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 348 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு பீரேன் சிங் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பீகார் மாநிலத்தின் நவாடா மாவட்டத்தில் நேற்று மின்னல் தாக்கி ஆறு பேர் உயிரிழந்தனர்.

**[]<<<>>>[]**

சென்னை ஆயிரம்விளக்கு தொகுதிக்கு உட்பட்ட சூளைமேட்டில் இறகுப்பந்து விளையாட்டு அரங்கத்தை மாநில அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

மன்னார்குடி அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோவில் ஆடிபூர திருவிழாவையொட்டி தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா இன்று இரண்டு பதக்கங்களுக்கான போட்டிகளில் பங்கேற்கிறது.

ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் இந்தியாவின் நீரஜ்சோப்ரா பங்கேற்கிறார்.

ஹாக்கியில் வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் இந்தியா இன்று ஸ்பெயின் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இந்திய நேரப்படி மலை மணி 5-30-க்கு தொடங்குகிறது.

ஆடவருக்கான 57 கிலோ மல்யுத்தப் போட்டியில் அமன் ஷெராவட்டும், மகளிர் பிரிவில் அன்ஷூவும் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

மல்யுத்த போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக வினேஷ் போகத் அறிவித்துள்ளார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து அவர் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

தாம் பெரிய அளவில் போராடிவிட்டதாகவும், இனிமேல் போராட சக்தி இல்லை என்றும் அவர் வேதனை தெரிவித்துள்ளார்.

விநேஷ் போகத் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் மூன்று முறை தங்கப்பதக்கம் வென்றுள்ள அவர், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஒரு தங்கம் உள்ளிட்ட இரண்டு பதக்கங்களை பெற்றுள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து விநேஷ் போகத் தாக்கல் செய்த மேல்முறையீடு மனு மீதான தீர்ப்பு இன்று அளிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

நேபாளத்தில் நடைபெற்ற மகளிர் வாலிபால் தேசிய லீக் போட்டியில் இந்தியா, நேபாளத்தை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**